Judicial from No.53

(Sec Rule 42)

DEPOSITION OF WITNESS

((Chapter XXIII, Cr.P.C)

2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,

திருவள்ளூர் (இ) பூந்தமல்லி

அமர்வு வழக்கு எண்.115 of 2021

Depositions of : PW3 (LW4)

solemnly by Tmt.N.Selvi, Translator

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கலாநிதி | தொழில் | : | கார் ஓட்டுனர். |
| தந்தை பெயர் | : | சந்திரசேகர் | முகவரி | : | எண்.19/3, நியு காலனி, மெயின் ரோடு, சைதாப்பேட்டை |
| வயது | : | 40 | மாவட்டம் | : | சென்னை |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 3rd day of November - 2025.

(1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜரில் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு ஏற்கப்பட்டது)

முதல் விசாரணை=

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். கார் ஓட்டுநராக பணி செய்து வருகிறேன். கடந்த 04.02.2021 அன்று எனது சித்தி இறந்துவிட்டதால் முகப்பேரில் அவருடைய வீட்டிற்கு போய் இருந்தேன். இரவு சுமார் 2.30 மணியளவில் டீ சாப்பிடுவதற்காக நானும் எனது உறவினர்களும் போன போது ஒருவர் கேனில் டீ விற்று கொண்டிருந்தார். நாங்கள் அவரிடம் டீ வாங்கி குடித்துக்கொண்டிருந்த போது அவர் என்னிடம் எனது போனை தருமாறும் சற்று தூரத்தில் இரண்டு பேர் ஒரு நபரை அடித்துக்கொண்டிருப்பதாகவும் போலிஸிற்கு சொல்லவேண்டும் என்றும் கேட்டார். நான் போனை கொடுத்தேன் அவர் போன் பேசிவிட்டு

திருப்பி கொடுத்துவிட்டார். அவர் பெயர் தர்மராஜ் என்று சொன்னார். நாங்கள் டீ குடித்துவிட்டு வந்துவிட்டோம். அதன் பிறகு போலிசார் வந்து இது குறித்து விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை–

நான் தனியாக தான் கார் ஓட்டுநராக வேலை பார்க்கிறேன். போலிஸிடம் எனது சித்தி பெயரை சொல்லவில்லை. அவர் எப்படி இறந்தார் என்றும் சொல்லவில்லை. அவரது முகவரியும் சொல்லவில்லை. அந்த சமயம் கோரோனா கால கட்டம் என்றால் சரிதான். அனைவரும் முக கவசம் அணியவேண்டும் என்றால் சரிதான். ஒருவருக்கு ஒருவர் தொடாமலும் இருந்தார்கள் என்றால் சரிதான். நான் எனக்கு தெரியாத ஒருவருக்கு நள்ளிரவில் போனை கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. அந்த இடத்தில் தள்ளி தள்ளி தான் மின் விளக்குகள் இருந்தது என்றால் சரியல்ல. போலிஸ் விசாரணையில் குறிப்பான நேரத்தை சொல்லவில்லை என்றால் சுமாரான நேரத்தை சொல்லவில்லை என்றால் சரியல்ல. குறிப்பான நேரம் எனக்கு தெரியாது. போலிசார் சொல்லி தான் டீ விற்ற நபர் பெயர் தர்ம ராஜ் என்று எனக்கு தெரியும் என்றால் சரிதான். போனை வாங்கி கொண்டு போய் விட்டேன் என்றால் சரிதான். அந்த போனுக்கு மறுபடியும் எந்த அழைப்பும் வரவில்லை என்றால் சரிதான். அந்த நபரிடம் போன் இருந்ததா என்று எனக்கு தெரியாது. அவர் தன்னிடம் போன் இல்லை என்று சொன்னார். போலிசார் என்னை சுமார் இரண்டு வாரங்கள் கழித்து விசாரித்தனர். தர்மராஜா என்பவர் என்னிடம் போனை வாங்கி பேசவில்லை என்றால் எனக்கு தெரியாது.

மறுவிசாணை இல்லை.